# கண்ணதாசன் (திரைப்பாடல்கள்)

(அ) ஆறு மனமே ஆறு அந்த ஆண்டவன் கட்டளை ஆறு....,
சேர்ந்து மனிதன் வாழும் வகைக்கு
தெய்வத்தின் கட்டளை ஆறு
தெய்வத்தின் கட்டளை ஆறு... (ஆறு)

ஒன்றே சொல்வார் ஒன்றே செய்வார்
உள்ளத்தில் உள்ள அமைதி
இன்பத்தில் துன்பம் துன்பத்தில் இன்பம்
இறைவன் வகுத்த நியதி.

சொல்லுக்கு செய்கை பொன்னாகும்
வரும் துன்பத்தில் இன்பம் பத்தாகும்
சொல்லுக்கு செய்கை பொன்னாகும்
வரும் துன்பத்தில் இன்பம் பத்தாகும்

இந்த இரண்டு கட்டளை அறிந்த மனதில்
எல்லா நன்மையும் உண்டாகும்
எல்லா நன்மையும் உண்டாகும்.... (ஆறு)

உண்மையைச் சொல்லி நன்மையைச் செய்தால்
உலகம் உன்னிடம் மயங்கும்
நிலை உயரும் போது பணிவு கொண்டால்
உயிர்கள் உன்னை வணங்கும்
உண்மை என்பது அன்பாகும் பெரும் பணிவு
என்பது பண்பாகும்.

இந்த நான்கு கட்டளை அறிந்த மனதில்
எல்லா நன்மையும் உண்டாகும்
எல்லா நன்மையும் உணட்ாகும்..... (ஆறு)

Scanned by CamScanner

ஆசை கோபம் களவு கொள்பவன் பேசத் தெரிந்த மிருகம்
அன்பு, நன்றி, கருணை கொண்டவன்
மனித வடிவில் தெய்வம்
இதில் மிருகம் என்பது கள்ள மனம்
உயர் தெய்வம் என்பது பிள்ளை மனம்

இந்த ஆறு கட்டளை அறிந்த மனது
ஆண்டவன் வாழும் வெள்ளை மனம்
ஆண்டவன் வாழும் வெள்ளை மனம்.

(ஆறு))

(ஆ) உள்ளத்தில் இருப்பதெல்லாம்
சொல்ல ஓர் வார்த்தையில்லை
நான் ஊமையாய் பிறக்கவில்லை
என் தங்கமே உனது மேனி
தாங்கி நான் சுமந்து செல்ல
எனக்கொரு பந்தமில்லை
எவருக்கோ இறைவன் தந்தான்
அந்த நாலு பேருக்கு நன்றி

நாலு பேருக்கு நன்றி
அந்த நாலு பேருக்கு நன்றி
தாய் இல்லாத அனாதைக்கெல்லாம்
தோள் கொடுத்து தூக்கிச் செல்லும்
நாலு பேருக்கு நன்றி.

உறவு என்றும் பாசம் என்றும்
இறைவன் பூட்டிய விலங்கு
அழுவதற்கும் சிரிப்பதற்கும்
அமைத்த உள்ளம் ஒன்று
அது வெள்ளம் தானே ஓடும்
ஆசை வெள்ளம் சொந்தம் தேடும்
சொந்தம் ஏதும் இல்லை என்றால்
அந்த நேரம் நால்வர் வேண்டும்
நாலு பேருக்கு நன்றி.

இன்பத்தையே பங்கு வைத்தால்
புன்னகை சொல்வது நன்றி
துன்பத்திலே துணை வந்தால்
கண்ணீர் சொல்வது நன்றி

Scanned by CamScanner

வாழும் போது வருவோர்கெல்லாம்
வார்த்தையாலே நன்றி சொல்வோம்
வார்த்தை இன்றி போகும்போது
மௌனத்தாலே நன்றி சொல்வோம்
நாலு பேருக்கு நன்றி.

# வைரமுத்து கவிதைத் தொகுப்புகள்
## அவசரத் தாலாட்டு

(அ) சோலைக்குப் பிறந்தவளே
சுத்தமுள்ள தாமரையே
வேலைக்குப் போகின்றேன்
வெண்ணிலவே கண்ணுறங்கு

அலுவலகம் விட்டு
அம்மா வரும் வரைக்கும்
கேசட்டில் தாலாட்டுக்
கேட்டபடி கண்ணுறங்கு

ஒரு மணிக்கு ஒருபாடல்
ஒலிபரப்பும் வானொலியால்
விளம்பரங்கள் மத்தியிலே
விழிசாத்தி நீயுறங்கு

ஒன்பது மணியானால்
உன் அப்பா சொந்தமில்லை
ஒன்பது முப்பதுக்கு
உன் அம்மா சொந்தமில்லை

ஆயாவும் தொலைக்காட்சி
அசதியிலே தூங்கிவிட்டால்
தூக்கத்தைத் தவிரத்
துணைக்குவர யாருமில்லை.

இருபதாம் நூற்றாண்டில்
என்கருவில் வந்தவளே
இதுதான் கதியென்று
இன்னமுதே கண்ணுறங்கு

தூரத்தில் இருந்தாலும்
தூயவளே உன் தொட்டில்

Scanned by CamScanner

ஓரத்தில் என் நினைவு
    ஓடிவரும் கண்ணுறங்கு
பேருந்தில் நசுங்கிப்
    பிதுங்குகின்ற வேளையிலும்
எடைகொஞ்சம் இழந்து
    இறங்குகின்ற வேளையிலும்

கோப்புக்குள் மூழ்கிக்
    குடியிருக்கும் வேளையிலும்
பூப்பூவாய் உனது முகம்
    புறப்பட்டு வரும்கண்ணே
தந்தைவந்து கொஞ்சுவதாய்த்
    தாய் மடியில் தூங்குவதாய்க்
கண்ணான கண்மணியே
    கனவுகண்டு நீயுறங்கு

புட்டிப்பால் குறையவில்லை
    பொம்மைக்கும் பஞ்சமில்லை
தாய்ப்பாலும் தாயுமின்றித்
    தங்கம்உனக் கென்ன குறை?

மாலையிலே ஓடிவந்து
    மல்லிகையே உனைஅணைத்தால்
சுரக்காத மார்பும்
    சுரக்குமடி கண்ணுறங்கு

தாலாட்டுப் பாட்டில்
    தளிரேநீ தூங்கிவிட்டால்
கோலாட்டம் ஆடக்
    கொண்டவர்க்கு ஆசைவரும்
உறவுக்குத் தடையாக
    ஓவென்று அலறாமல்
இரவுக்கு மிச்சம் வைத்து
    இப்போது நீயுறங்கு

தாயென்று காட்டுவதற்கும்
    தழுவி எடுப்பதற்கும்
ஞாயிற்றுக் கிழமைவரும்
    நல்லவளே கண்ணுறங்கு.

Scanned by CamScanner

# அவன் கலைமகளுக்குப் பாடம் சொல்கிறான்

[ஒரு பல்கலைக் கழகம்: அதன்முன் ஒரு பசும் புல்வெளி, வேலையில்லாத ஒரு பட்டதாரிக் கவிஞன், பிரச்சினைகளின் பிடியிலிருந்து ஒரு தப்பிப்பு கருதி, வானத்து வெள்ளை மேகங்களில் விழி செலுத்துகிறான். அந்தக் கற்பனை மயக்கம் இதயப் புண்ணுக்கு ஒரு பொய் மருந்து பூசுகிறது. இமைகளைக் கவியவிட்டு அவன் காணுங் கனாவில் கல்வித் தெய்வம் கலைமகள் அவனுக்குப் பிரசன்னமாகிறாள்.]

**கலைமகள்:** மண்ணின்
மயிர்க் கூச்சங்களாய்
விம்மி நிற்கும் இந்தக் கட்டிடங்கள்
எவருக்காகவோ?

**கவிஞன் :** தெரியவில்லை?
இவைகள்தான் அம்மா
உன்
அந்தரங்க ஆலயங்கள்
இங்குதான்
கல்விக் கண்ணைத் திறக்கிறார்களாம்.

**கலைமகள்:** எப்படி நடக்கிறது
கண்ணைத் திறக்கும் காரியம்?

**கவிஞன் :** அதையேன் கேட்கிறாய்
அந்த
மூன்றாங் கண்ணைத் திறக்கும்
அவசரத்தில்
இருக்கும் இரு கண்களையும்
குருடாக்கிவிட்டுக்
கூத்தடிக்கிறார்கள்
ஆமாம். சரஸ்வதி
இது
குருடர்கள் பள்ளி
இங்கு

Scanned by CamScanner

படம் பார்த்துக் கதைசொல்லும்
பாடம் திட்டம்

**கலைமகள்:** பேராசிரியரெல்லாம்
"புதியதோர் உலகம் செய்வோம்"
என்று
முழங்காமல் பேச்சை
முடிப்பதில்லையே

**கவிஞன் :** முற்றத்தில் அப்படித்தான்
முழங்குவர்.
உள்ளே போய்ப்பார்
பழைய பிணங்களுக்கு
வேர்க்கக் கூடாதென்று
விசிறிக் கொண்டிருப்பார்கள்

**கலைமகள்:** ஆய்வாளர் பலர் இருந்தும்
புதுமை இன்னுமா
புலரவில்லை?

**கவிஞன் :** ஆய்வா?
பெரிய எழுத்து விக்கிரமாதித்தனின்
முதல் பதிப்பு முதல்
மூன்றாம் பதிப்பு வரை
அட்டை வித்தியாசங்களைப்
பட்டியல் போடுவது
அதுதானே தாயே ஆய்வு?

**கலைமகள்:** பெற்ற கல்வியை
நீங்கள்
பேணுவதில்லையோ?

**கவிஞன் :** பேணுவதாவது....
விண்ணப்பங்கள் எழுதும்
வேலை மட்டும் இல்லாவிட்டால்...
வேலை கிடைக்குமுன்னே
அட்சரங்களெல்லாம்
அடியோடு மறந்திருக்கும்

**கலைமகள்:** வேலை கிடைப்பதென்ன
அவ்வளவு அரிதா?

Scanned by CamScanner

இதை எதிர்த்துப்
புதுயுகப் புலிகள்
போராடவில்லையா?

**கவிஞன் :** போராடுகிறார்கள்
இன்னும்
போதிய தெளிவில்லை
இந்தக் கலியுக அனுமன்கள்
இலங்கையைக் கொளுத்தும் அவசரத்தில்
சீதையைக் கூடச் சேர்த்தெரிக்கிறார்கள்
இந்தக் கல்வியால்
முதுமைக்கு விழுந்திருப்பது
வெள்ளெழுத்து
வாலிபத்திற்கு விழுந்திருப்பது
மஞ்சளெழுத்து

**கலைமகள்:** அப்படியானால்...
இதுவரை
போதித்த கல்வி சாதித்ததென்ன?

**கவிஞன் :** சரியான கேள்வி சரஸ்வதி
சாதனை சொல்லவோ?

1. வாழ்க்கையின் வேர்களைப்
பார்க்க மறுக்கும்
ஒரு
பவுடர் பரம்பரை

2. அதிகாரிகள்
சொன்னதைச் சொல்லும்
உத்தியோகக் கிளிகள்

3. சதை சந்தோஷக் கதைகளின்
இருட்டுவரி வாசகர்கள்

4. பாமரர்க்கு
பணவிடைத் தாள்களைப்
பூர்த்தி செய்துதரும் சில
புத்திசாலிகள்

5. புதியதொரு நாட்டைக்
கண்டுப்பிடித்துவிட்ட

Scanned by CamScanner

களிப்புக் கூச்சலில்
திரும்பிவரும் வழியை
மறந்துவிட்டவொரு
மாலுமியைப்போல்...
படிப்பை முடித்துவிட்டுப்
பாதை தெரியாத பட்டதாரிகள்
வாழ்க்கைக்குள்
முக்குளிக்கச் சொல்லித்தராத
இந்தக் கல்வி
முத்துக்களென்று
குமிழிகளைத்தானே
கோக்கச் சொல்கிறது.

**கலைமகள்:** கல்விமான்கள்
இதைத்
திருத்த வேண்டும் என்று
தீர்மானம் போட்டதுண்டா?

**கவிஞன் :** அவர்களா...?
மனப்பாட மண்டபங்களில்
மண்டிய ஒட்டடைகளை
சரிகைகள் என்றல்லவா
சாதிக்கிறார்கள்?

**கலைமகள்:** என்னதான் செய்வது
இதற்கு?

**கவிஞன் :** ஒன்று செய்ய வேண்டும்
வாழ்க்கைக்கும்
வகுப்பறைக்கும் இடையே
தொங்கும் திரையைத்
துணிக்க வேண்டும்
இல்லையேல்....
நீ
வெள்ளி நாவுகளிலும்
தங்க நாவுகளிலும் மட்டுமே
வாசம் புரிவது
வழக்கமாய் விடும்

கலைமகள் அழுதாள்

Scanned by CamScanner

தன் வீணையில்
முகாரி கிளப்பினாள்

தாமரைப் பூவைவிட்டு
எழ எத்தனித்தாள்
எழுந்து... எழுந்து....
விழுந்து... விழுந்து....

விடிந்து
காலை முரசில் ஒரு கண்ணீர்ச் செய்தி

கடற்கரைச் சாலையில்
அழகியொருத்தி

தாமரைப் பூவின் மேல்
இறந்துகிடந்தாள்

போலீசார்
அவள்
சரஸ்வதியோ என்று
சந்தேகிக்கிறார்கள்

வெள்ளை மேகங்கள்
பார்வையைக் கடந்து
பயணம் போயின

கவிஞனின்
கனாமயக்கம் கலைந்தது

விண்ணப்பத் தபாலொன்று
அவன்
கையிலிருந்து கனத்தது

அஞ்சல் பெட்டியில்
அடுத்த எடுப்பு
5-10

அவன் நடந்தான்
தூரத்தில்....
அது
சிவப்பாய்ச் சிரித்தது.

Scanned by CamScanner

# அநாதி காலம் - தேன்மொழி

## காடு வெறுங்காடா

(அ) தேயிலை
விரல்களின் பனிவெடிப்பில்
மருதாணிச் சிவப்பை
அப்பிவிட்டாலும்

'கொழுந்து தான்டா குலதெய்வம்'
என்று சொல்லும்
செவத்தாயி அத்தை

கொம்புத் தேனும்
கோவைக் கொடியும்
சுமந்து போகையில்

புன்னவனம் மாமா
உனக்குஞ் சேத்துதாம் பொண்ணே
மருந்து சுமக்கிறே என்பார்.

காளானை பறித்துக் கொண்டே
சசிகலா சித்தி சொல்லும்
'மக்கிப்போக மனசில்லாம இப்படி
மரக்காளானா பூக்குதிடி' என்று

'காடு வெறுங்காடா
நம்மள காப்பாத்திக் கிடக்கிற
பசுமாடு என்பார்'
சாமாண்டித் தாத்தா

Scanned by CamScanner

'நடுக்காட்டுல குடிக்கிற
ஊத்துத் தண்ணி
நாலு வருஷ ஆயிசக் கூட்டிருமிடி'
என்று சொல்லும் உதயா சித்தி

வனத்து சின்னப்பா
கோயிலைக் கடக்கையில்
அம்மா சொல்லும்
'சின்னப்பர கும்பிட்டாலும் பரவாயில்ல
வனத்தைக் கும்பிடனும்'

எப்போது காட்டு வழி போனாலும்
அப்பா சொல்வார்

'காடு தாண்டா
சோறுந் தீயும்
காத்தும் மழையும்'

## மனக்குறிப்பு

(ஆ) அவகாசங்களில்
என்னை வெளிப்படுத்த
எங்கே விட்டிருக்கிறாய்

மான் தின்ற மலைப் பாம்பு
மரம் சுற்றி நெரிவது மாதிரி
என் உணர்வுகளை
எனக்குள்ளேயே
சடசடக்க விடுகிறேன்

படபடக்கிற உன் சிறகின்
எல்லா ஓசையும்
எனக்குத் தெரியும்

உன்னால்
எந்த ஒலிநாடாவிலும்
பதிவு பண்ண முடியாது
என் கேவல்களை

Scanned by CamScanner

Padma Sri. R.

I B.Sc (Zoology)

# கருவறை வாசனை - கனிமொழி கருணாநிதி

## நம்பிக்கைப் பிரதிகள்

(அ)

எங்கள் வீட்டு மொட்டை மாடி
பிரம்புச் சாய்வு நாற்காலி
கருத்த வானம் நிலவொளி
சாலை ஓரத்து இளவட்டங்களாய்
கண் சிமிட்டும் நட்சத்திரங்கள்
திண்ணை தூண் முற்றம்
என்றிருந்த எதிர் வீடு
இன்று இரும்புக் கம்பிகளாய்
வான் நோக்கி வளர்ந்தபடி
காலம் காலமாய் உலகில்
எத்தனை மாற்றங்கள்!

வானத்து மேகத் திட்டுகள் போல்
பனி பூத்த உலகம்
இயற்கையோடு முரண்படாத மனிதன்
முதல் காமம் தணித்துச்
சொன்னான் 'கடவுளின்
முதல் பாவம் - பெண்! '
நூற்றாண்டுகள் ஓடின
பூமியில் கீறல்கள்
என்மீது வடுக்கள்.

Scanned by CamScanner

பந்தயங்களில் பணயமாக்கப்பட்டேன்
கோயில்களில்
விக்கிரகங்களாக்கப்பட்டேன்
எனக்காகப் போர் தொடுத்தார்கள்
கவர்ந்தவனிடமிருந்து மீட்டார்கள்
காவியம் படைத்தார்கள்
உடமையாய் உரியவளாய்
உயிரற்ற ஜடப்பொருளாய்
ஆகிப்போனேன்.

வாழ்க்கையோ உலைகளம்
பாதையெங்கும் சிதைகள்
ஆங்காங்கே பெண் மாயை
ஒழிக்க வாளுருவிய கூட்டங்கள்
முன் அறையில் எனது
முதல் சுயம்வரப் படலம்
பற்றிய பேச்சு வார்த்தைகள்
மனம் பாடியது - சிலிர்த்துச்
சிறகு விரிக்கும் பட்டுப் பூச்சிகள்
என்னுள் நாளை பற்றிய
நம்பிக்கைக் கனாக்கள்
இன்னும் விரல் பற்றும்
குழந்தைகளாய் நாங்கள்

## தெளிவு

✦ போட்டி என்ற ஒன்று
மட்டும் எனக்கு இன்றும்
புரியாத தமிழ்ச்சொல்

✦ உலகில் யாரோடும் யாருக்கும் போட்டி.

✦ எண்பது மதிப்பெண் பெற்ற
குழந்தையிடம்
முதல் கேள்வி,
பக்கத்து வீட்டானை விட
மார்க் அதிகமா, கம்மியா?

Scanned by CamScanner

தத்தித் செல்லும் தன் மழலையை
ரசிக்கும் தாயிடம்,
எதிர்வீட்டுக்காரி சொல்வது.
'என் குழந்தை ஏழே மாதத்தில்
ஓடியது' என்று தான்.

செத்துத் சிதையாகிக் கதையான
சீதைக்கும் கண்ணகிக்குமிடையே
பட்டிமன்றங்களில் கற்புப் போட்டி.
குபேரபுரிகள் கூட பக்கத்து
ஊரில் நல்ல காற்று வீச
இங்கு நெருப்பாய்ப் பற்றிக்கொள்ளும்.
இதில், உரசிய தீப்பந்தங்களாய் நாம்.
ஆணா பெண்ணா ஆதிக்கப் போட்டி,
அன்பு வடிவாம் இறைவனுக்கே
மதங்கள், வெட்டரிவாள், கம்போடு போட்டி.

நீயா, நானா, புஜம் தட்டு.
மனம் சுருக்கு, அறிவு முடுக்கு,
உலக சுழற்சியே இதுவாய்ப் போனதோ!
இரண்டரை வயதுக்குட்பட்ட
சிறார்களுக்கு ஓவியப் போட்டி
நீதிபதி நீ என்றார்கள்-
அங்கு, காகிதத்தில் சாயம்
தோய்ந்த சிறுவிரல் பதிவு.
நவீன ஓவியக் கோடுகள்
வண்ணக் கலவைகள் கண்டேன்...

ஆனால் மனதில் அறைந்ததோ
போட்டி நேரம் முடிந்ததும்
கர்மமே கண்ணான சில
ஓவியத் தளிர்களும், முடிவு, பரிசு
என சலனமற்ற முகங்களும்.

செயலின் சுகம் மட்டுமே பிரதானம்.
இரண்டு வயதில் புரிந்து,
இருபதில் எப்படி மறந்தது?

மானுடம் இயந்திரத் தயாரிப்பா?
உயிர்க் கருக்கள் அச்சாய்ப் போகுமோ?

Scanned by CamScanner

உனக்கும் எனக்குமிடையே
எங்கு இணைப்புக் கட்டு?

பயணி! உனக்கு இதமான வேகத்தில் நீ!
வாழ்க்கை என்பது ஒற்றையடிப் பாதையா?
நெரிசலான சந்தை வீதியா?
பக்கத்துப் பயணியை நீ
பிடித்துத்தள்ள
பின்னால் வந்தவன்
வேகம் கூட்டுவான்.

நேற்றை விடு நாளை
நோக்கி ஓடுவதே வாழ்க்கை
புதிய சுவடுகள் பிறப்பதே வெற்றி.

போட்டி என்பது எனக்குள் மட்டுமே,
என் இறந்த காலம் நிகழ்காலத்திடம் தோற்கும்
எதிர்காலம் இலக்கணத்தை ஜெயிக்கும்,
பூமி என்பது விஸ்தாரமான வீதி.

Scanned by CamScanner